சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 03.02.2020

பி.வா.சா.2 : தவமணிநாராயணன், த-பெ.கோபாலகிருஷ்ணன்

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க எனக்கு சம்மன் வரவில்லை என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி சாந்தி சொன்னதன் பேரில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் சாந்தியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அதில் கையொப்பம் மட்டும் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்துவருகிறேன். வடமலைக்குறிச்சி பஞ்சாயத்தில் நான் எந்த வேலையும் பார்க்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள வாய்மொழி ஏற்பாடு எந்த தேதியில், எங்கு வைத்து எத்தனை மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வாய்மொழி ஏற்பாடு நிகழ்வானது யார்யார் முன்னிலையில் ஏற்பட்டது என்பதையும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. வாய்மொழி ஏற்பாடு நிகழ்வில் யார்யார் கலந்துகொண்டார்கள் என்பதையும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வாய்மொழி ஏற்பாட்டு நிகழ்வில் இறந்துபோன 1ம் வாதி கலந்துகொண்டதாக நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தானது ராமசாமிரெட்டியாருக்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்து என்று சொன்னால் கிரையம் வாங்கிய சொத்தும் உண்டு, பூர்வீக சொத்தும் உண்டு. அந்த கிரைய சொத்துக்கள் ராமசாமிரெட்டியார் அவர்காலத்தில் அவரே கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். 1ம் வாதி குருவம்மாள் திருமணம் முடிந்து வழக்கு தபசில் சொத்தில் வசித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்தில் என்ன என்ன லக்க சொத்து என்று தெரியுமா என்றால் 20 லக்க சொத்து ஆகும். தபசில் சொத்துக்கள் 24 லக்க சொத்துக்கள் என்றும், எனக்கு வழக்கு சொத்துக்கள் விவரம் தெரியாததால் தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்துக்களுக்குரிய சர்வே எண், நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. தபசில் சொத்துக்களை ராமசாமி ரெட்டியார், வாதி, 1ம்

பிரதிவாதி, 2ம் பிரதிவாதி கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால், பொதுவாகதான் அனுபவித்து வந்தார்கள். சாட்சி மறுபடியும் சொல்கிறார் சொத்து பொதுவாக இருந்தது, திருமணம் ஆனபின்னர் பிரதிவாதிகள் மட்டும் அனுபவித்து வந்தார்கள். ராமசாமி ரெட்டியார் இறந்தபின்னர் வாதி, 1ம் பிரதிவாதி,2ம் பிரதிவாதி கூட்டாகத்தான் சொத்துக்களை ் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் ராமசாமி ரெட்டியார் பெயரில் பட்டா தாக்கலாகி இன்றுவரை உள்ளது என்றால் சரிதான். ராமசாமிரெட்டியார் இறந்த பிறகு வாதி, 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி கூட்டாகதான் அனுபவித்து வந்தார்கள் என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பாலகுரு பாகம் எதுவும் வேண்டாம் என்று ஆவணம் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. 1ம் வாதியும் பாகம் எதுவும் வேண்டாம் என்று ஆவணம் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. இறந்துபோன 2ம் பிரதிவாதியின் முதல் மனைவி பாக்கியலட்சுமி என்றால் சரிதான். அவர்களுக்கிடையே ஜுவனாம்சம் கேட்டு வழக்கு அருப்புக்கோட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். கந்தசுப்பையனுக்கு பாக்கியலட்சுமி வாரிசு என்று சொன்னால் வாரிசுஇல்லை. அவர்களுக்கிடையே திருமணம் நீதிமன்றத்தில் மூலம் விவாகரத்து ஆகவில்லை என்று சொன்னால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் கூறியுள்ள வாய்மொழி ஏற்பாட்டின்படி 1 முதல் 16 லக்க சொத்துக்கள் கந்தசுப்பையன் அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால ் சரியல்ல. 17,18,19 லக்க சொத்துக்கள் கந்தசுப்பையன் அடைந்து அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 20வது லக்க சொத்து பாலகுரு அடைந்து அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 6ம் பிரதிவாதி சாந்தி வடமலைக்குறிச்சி பஞ்சாயத்து அலுவலகத்தில் கிளர்க்காக வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். சாந்தி எனக்கு பழக்கமானவர் என்றால், என்னுடைய தேவைக்காக பஞ்சாயத்து அலுவலகம் சென்று வருவதில் எனக்கு பழக்கமானவர். சாந்தி பஞ்சாயத்து அலுவலகத்தின் மூலமாக என்னுடைய தேவைக்கு நிறைய உதவி

செய்துள்ளார் என்றால் எதை செய்யவேண்டுமோ அதை செய்துதந்தார். கந்தசுப்பையன், பாலகுரு என்பவர்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்ய யார் மனு கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும். மனுவுடன் சேர்ந்து என்ன ஆவணங்கள் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சாந்தி ராமசாமி ரெட்டியார் இறந்தபின்னர் 6ம் பிரதிவாதி சாந்தி அவரது அலுவலக அதிகாரத்தை பயன்படுத்தி அவரது கணவர் பெயரில் வழக்கு தபசில் சொத்தினை மாற்றிக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தபசில் சொத்துக்களை வாதி, 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி கூட்டாக அனுபவித்து வருவதாக வழக்கு நடத்தி வருகின்ற விவரம் எனக்கு தெரியும். நான் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு எந்த வாய்மொழி ஏற்பாடு எந்த காலத்திலும் நடக்கவில்லை என்றும், 6ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாய்மொழி ஏற்பாட்டில் நான் கலந்துகொண்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் அந்த வாய்மொழி ஏற்பாடு நடைபெற்றிருந்தால் எந்த தேதியில் எங்கு வைத்து, எத்தனை மணிக்கு நடைபெற்றது என்று குறிப்பிட்டிருப்பேன் என்றும், அவ்வாறு நடைபெறாததால்தான் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன 1ம் வாதி உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு தபசில் சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்துவந்தார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதி இறந்தபிறகு அவரது வாரிசுகளும், 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும், அவரது வாரிசுகளும் கூட்டாக அனுபவம் செய்துவந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 6ம் பிரதிவாதியும், அவரது குழந்தைகளும் கூட்டாக அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ராமசாமி ரெட்டியாருக்கு வாதி, 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி வாரிசுகள் ஆவார்கள் என்று சொன்னால் சரிதான். நான் சொன்னபடி எந்த

வாய்மொழி பாகப்பிரிவினையும் நடைபெறவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(மேற்படி குறுக்குவிசாரணையை 1ம் பிரதிவாதி மற்றும் 8ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)